# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● செப்டம்பர் 10, 2022 Weekly E-paper ● September 10, 2022



# கட்டிடம் கலகலத்துக் கொண்டிருக்கிறது!

சுப.வீரபாண்டியன்

## களத்தில் ராகுல்! வாழ்த்தி அனுப்பினார் ஸ்டாலின்!

இராம.வைரமுத்து

## உயர்வுள்ளும் நம் முதல்வர்

தலையங்கம்

## ‘புதுமைப் பெண்’ திட்டம் புரட்சித் திட்டமே!

மதிவாணன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● செப்டம்பர் 10, 2022 Weekly E-paper ● September 10, 2022


# கட்டிடம் கலகலத்துக் கொண்டிருக்கிறது!

**சுப.வீரபாண்டியன்**





தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு நலத்திட்டங்களை வழங்கிய நெல்லை நிகழ்ச்சியில், அத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் நயினார் நாகேந்திரனும் பங்கேற்றுப் பேசி இருக்கிறார்.

அரசு விழா என்பதால் பாஜகவின் சட்டமன்ற உறுப்பினரும் அழைக்கப்படும் மரபு அங்கே பின்பற்றப்பட்டு இருக்கிறது. அது இயல்பானதுதான். ஆனால் அவ்விழாவில் நாகேந்திரன் ஆற்றியுள்ள உரைதான் வியப்பிற்கும் பாராட்டுக்கும் உரியதாக இருக்கிறது.

முதலமைச்சரின் நடவடிக்கைகளையும் செயல்பாடுகளையும் நயினார் நாகேந்திரன் அவ் விழாவில் மனந்திறந்து பாராட்டியிருக்கிறார். அவருடைய நெல்லைப் பயணம் மாநகரத்துக்குப் பல நன்மைகளைக் கொண்டு வந்திருப்பதாகக் கூறியுள்ள அவர், அடிக்கடி முதலமைச்சர் நெல்லைக்கு வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

தமிழ்நாடு சட்டமன்றத்திலும் எதிர்க்கட்சியினருக்கு உரிய மதிப்பும் வாய்ப்பும் அளிப்பதாகக் கூறி முதல்வரை அவர் பாராட்டி இருக்கிறார்.

அண்மைக்காலமாக வார ஏடுகளில் நயினார் நாகேந்திரன், வி. பி. துரைசாமி ஆகியோர் பாஜகவை விட்டு வெளியேறப் போகின்றனர் என்னும் செய்தி வந்து கொண்டிருக்கிறது.

ஜூனியர் விகடன் வெளிப்படையாகவே வெறும் பேச்சு அண்ணாமலை என்று அட்டைப்படக் கட்டுரையே வெளியிட்டு இருக்கிறது. அண்ணாமலைக்குக் கட்சிக்குள்ளேயே கடும் எதிர்ப்புகள் வந்து கொண்டிருப்பதாகவும், அவருடைய பேச்சு எந்தச் சாரமும் இல்லாத வெட்டிப் பேச்சாக இருப்பதாகக் கட்சியில் உள்ள சீனியர்கள் பலர் கருதுவதாகவும் அந்த ஏடு எழுதி இருக்கிறது.

கட்சி வளர்ச்சியில் எந்தக் கவனமும் செலுத்தாமல் வெறுமனே ஊடகங்களைச் சந்திப்பதிலும், தன் பெயரும் படமும் பத்திரிகைகளில் அன்றாடம் வெளிவர வேண்டும் என்பதிலும் மட்டுமே அண்ணாமலை ஆர்வம் காட்டுகிறார் என்று அக்கட்சியினர் கருதுகின்றார்கள் என்று கூறுகிறது. அதற்கான ஆதாரத்தையும் ஜூனியர் விகடன் தந்திருக்கிறது.

தமிழ்நாட்டில் 72,000 வாக்குச்சாவடிகள் (பூத் கமிட்டிகள்) இருப்பதாகவும், அத்தனைத் தொகுதிகளிலும் அத்தனை வாக்குச்சாவடிகளிலும் திமுகவின் குழுக்கள் அமைத்திருக்கின்றன என்றும், அதற்கு இணையாக அதிமுகவும் உள்ளது என்றும் கூறிவிட்டு, பாஜகவின் நிலையோ மிகப் பரிதாபமாக இருக்கிறது என்றும் கூறுகிறது.

எல் முருகன் தலைவராக இருந்தபோது, 6700 பூத் கமிட்டிகள் இருந்தன. அந்த எண்ணிக்கை இப்போதும் அப்படியேதான் இருக்கிறது என்று அந்த ஏடு குறித்துள்ளது.

அதனால்தான் அண்ணாமலைக்கு இணையாக இனிமேல் முருகனும் அடிக்கடி தமிழ்நாட்டுக்கு வந்து கட்சி வேலைகளைக் கவனித்துக் கொள்வார் என்று தெரிவதாகவும் அந்த வார இதழ் செய்தி தந்திருக்கிறது.

தமிழ்நாட்டில் தாங்கள் வளர்ந்து கொண்டிருக்கிறோம், அடுத்த முதல்வர் அண்ணாமலைதான் என்று சின்ன பிள்ளைக்கும் கேட்டுச் சிரிக்கும் விதத்தில் வாய்ச்சவடால் பேசிக் கொண்டிருக்கும் பாஜகவின் ஒரு பகுதியினர், தங்கள் கட்சியின் உண்மை நிலையை உணர வேண்டும். உண்மையில் அந்தக் கட்சிக் கட்டிடம் தமிழ்நாட்டில் மேலும் கலகலத்துக் கொண்டிருக்கிறது.

டாக்டர் சரவணன் கட்சியை விட்டு வெளியேறினார். இப்போது நயினார் நாகேந்திரன், வி.பி. துரைசாமி ஆகியோர் ஒரு காலை எடுத்து வெளியில் வைத்து விட்டார்கள் என்று ஊடகங்கள் கூறுகின்றன. அவர்களைத் தொடர்ந்து இன்னும் எத்தனை பேர் என்பது தெரியவில்லை.

வெறும் பேச்சு வீராசாமிகள் உண்மை நிலையை உணர்ந்திட வேண்டும். தமிழ்த் தேசியம் என்னும் பெயரால் திராவிட இயக்கத்தை எதிர்ப்பதற்குச் சில கைக்கூலிகளை வைத்துக்கொண்டு இருப்பது மட்டும் போதாது. திராவிட இயக்கத்தின் சமூக நீதி, சமத்துவம், பெண் விடுதலை ஆகிய அசைக்க முடியாத கோட்பாடுகளை வெறும் போலித் தமிழ் தேசியவாதிகளைக் கொண்டு தகர்த்து விட முடியாது. இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் தாமரையால் இங்கு துளிர் விட முடியாது. இருக்கும் இதழ்களும் உதிர்ந்து விடாமல் பார்த்துக் கொள்வது கட்சியின் இன்றைய நிலையாகவும், தேவையாகவும் இருக்கிறது என்பதை அவர்கள் உணர்ந்தால் நல்லது! ●

# கடும்பயணம்! களத்தில் ராகுல்! வாழ்த்தி அனுப்பினார் ஸ்டாலின் !

## வழக்கறிஞர் இராம.வைரமுத்து

2014 மற்றும் 2019 நாடாளுமன்றத் தேர்தல்களில் படுதோல்வியைச் சந்தித்த காங்கிரஸ் கட்சி வரஇருக்கிற 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்குத் தற்போது தயாராக வேண்டிய சூழலில் உள்ளது. அரசியல் ரீதியாகக் கட்சிக்கு உள்ளும், வெளியிலும் கடும் நெருக்கடிகளைச் சந்தித்து வரும் நிலையில், அமலாக்கப் பிரிவும் காங்கிரஸைக் குறி வைத்திருக்கிறது.



இது குறித்து, கடந்த மே மாதம் உதய்பூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டின் சிந்தனை அமர்வில் ஆலோசித்து 'பாரத் ஜோடோ யாத்திரை' (ஒன்றிய ஒற்றுமைப் பயணம் ) நடத்துவது என்று அக்கட்சியின் இடைக்காலத் தலைவர் சோனியா காந்தி அறிவித்தார். இந்தப் பயணம் ராகுல் காந்தி தலைமையில் நடைபெறும் என முடிவு செய்யப்பட்டது.

07.09.2022 அன்று மாலை 5 மணிக்குக் கன்னியாகுமரியில் தொடங்கிய இந்தப் பயணம், 150 நாட்கள் தொடர்ந்து நடந்து காஷ்மீரில் நிறைவடைகிறது. 3,570 கி.மீ. தொலைவு செல்லும் இந்தப் பயணம், ஒவ்வொரு நாளும் காலை – மாலை தலா மூன்று மணிநேரம் என 20 கி.மீ தொலைவைக் கடக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. கேரளா, கர்நாடகா, தெலங்கானா, மகாராஷ்டிரா, மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், ஹரியாணா, தில்லி, பஞ்சாப் உள்ளிட்ட 12 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்கள் வழியாக இந்த நடைபயணம் நடைபெறும். இந்த நடைபயணத்தில் மூன்று விதமான பங்கேற்பாளர்கள் இருப்பார்கள்.







இந்த நடைபயணத்தின் தொடக்கம் முதல் முடியும் வரை கலந்துகொள்ளும் 100 பேர், நடைபயணம் மேற்கொள்ளப்படும் மாநிலத்தைச் சேர்ந்த 100 பேர், எந்தெந்த மாநிலங்கள் வாயிலாக இந்த நடைபயணம் மேற்கொள்ளப்படவில்லையோ அந்த மாநிலங்களைச் சேர்ந்த 100 பேர் கலந்துகொள்ள உள்ளனர். இப்படி ஒரே சமயத்தில் 300 பேர் இந்த நடைபயணத்தில் உறுதியாகக் கலந்துகொள்கின்றனர். தேசியக்கொடியை ஏந்தி நடைபெறும் இந்த நடைபயணத்தில் இடதுசாரி, பொதுவுடைமை அமைப்புகள், காங்கிரஸ் விமர்சகர்கள், பொதுச் சமூகம் எனப் பல்வேறு தரப்பினரும் பங்கேற்கின்றனர்.

கன்னியாகுமரி காந்தி மண்டபம் நுழைவுவாயிலில் 07.09.2022 அன்று மாலை ராகுல்காந்தியிடம் தேசியக் கொடியை வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின், இந்த நடைபயணத்தைத் தொடங்கி வைத்தார்.

“இன்று, என் சகோதரர் ராகுல் காந்தி இந்தியாவின் ஆன்மாவை மீட்டெடுக்கவும், நமது குடியரசின் உயர்ந்த இலட்சியங்களை நிலைநிறுத்தவும், நம் நாட்டு மக்களை அன்புடன் ஒன்றிணைக்கவும் ஒரு பயணத்தைத் தொடங்கியுள்ளார். சமத்துவச் சிலை தலை நிமிர்ந்து நிற்கும் குமரியை விடச் சிறந்த இடம் வேறு எதுவும் இருக்க முடியாது. இந்தியாவின் பெரிய கட்சி, இந்தியாவை ஒடுக்குமுறையிலிருந்து விடுவிக்க ஒரு கடினமான பணியை மேற்கொண்டுள்ளது. ஒற்றுமை நடைபயணம் வெற்றி பெற வாழ்த்துகிறேன்”என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் டிவிட்டரில் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் போராட்டத்தின் போது மகாத்மா காந்தியடிகள் மேற்கொண்ட தண்டி யாத்திரை, நெருக்கடி நிலைக்குப் பிறகு ஜெயப்பிரகாஷ் நாராயணன் மேற்கொண்ட நடைபயணம், திருச்செந்தூர் கோவில் வைரவேல் திருட்டு மற்றும் கோவில் அதிகாரி மர்ம மரணத்தையொட்டி தலைவர் கலைஞர் மேற்கொண்ட நீதி கேட்டு நெடும் பயணம் போன்றவை இந்திய அரசியல் அரங்கில் முக்கியத்துவம் வாய்ந்தவை. அந்த வரிசையில் ராகுல் காந்தியின் இந்தப் பயணமும் இடம் பெறுகிறது.

நாடெங்கும் வெறுப்புணர்வைத் தூண்டி மதவாத அரசியலை முன்னெடுக்கும் பா.ஜ.கவை ஆட்சிக் கட்டிலில் இருந்து அகற்ற அச்சாரமாக இப்பயணம் மக்களை எழுச்சி பெறச் செய்யவும், தொடர் தோல்விகளால் துவண்டிருக்கும் காங்கிரஸ் தொண்டர்களுக்குப் புத்துயிரூட்டும் வகையில் அமையும் என்பது அரசியல் நோக்கர்களின் கருத்து.

முன்னரே முதல்வர் மு.க.ஸ்டாலின் “இந்தியாவின் வரலாறு தெற்கில் இருந்து எழுதப்பட வேண்டும்” என்று குறிப்பிட்டதைப் போல இந்தியாவை மீட்கும் இந்தப் பயணம் தெற்கிலிருந்து தொடங்கி இருக்கிறது. அனைத்து மனமாச்சரியங்களை மறந்து எதிர்க்கட்சிகளை ஓரணியில் திரட்டினால் ஆளும் பா.ஜ.கவை விரட்டி அடிக்கலாம் என்று சுட்டிக் காட்டிய முதல்வர் மு.க.ஸ்டாலின் இப்பயணத்தைத் தொடங்கி வைத்திருப்பது நல்லதொரு நம்பிக்கையைத் தந்திருக்கிறது.

மதவாதத்தை வீழ்த்துவோம்! மனிதநேயத்தைக் காப்போம் !

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## உயர்வுள்ளும் நம் முதல்வர்

இந்திய ஒன்றியத்தில் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களுள் ஒன்றாக 'ஜவகர்லால் நேரு' பல்கலைக்கழகம் விளங்குகிறது.

இப்பல்கலையில் இந்திய மொழிகள் மையத்தில் தமிழ், இந்தி, உருது, கன்னடம், ஒடியா, வங்கம் ஆகிய மொழிகளின் இருக்கைகள் இயங்குகின்றன.

தமிழ் இலக்கியவியல், தமிழ் - திராவிட மொழியியல், தமிழ் - தென்னக வரலாறு, சமூகவியல் ஆகிய ஆய்வுகளை மூன்று வகையாக விரிவுபடுத்தி அந்தப் பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியவியல் எனும் தனித்துறையாகச் சிறப்பாக இயங்கும் வகையில் தமிழக அரசு ரூபாய் 5 கோடியை நிதியாக வழங்க முதல்வர் ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார் என்பது, இனிப்பேறிய செய்தியாக இருக்கிறது.

இது குறித்து முதல்வர் தன் வலைத்தளப் பதிவில், மறைந்த முன்னாள் முதல்வர், தலைவர் கலைஞர் அவர்கள் தமிழுக்குச் செம்மொழித் தகுதியைப் பெற்றுத் தந்ததன் விளைவால், ஜே.என்.யூவில் தமிழிருக்கைத் தோற்றுவிக்கப்பட்டது என்றும், அதன் அடுத்தக் கட்ட வளர்ச்சிக்காகத் தமிழக அரசு இந்நிதியை வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம், உலக அளவில் தமிழ்மொழிக்கான அங்கீகாரத்தைப் பெற்றுத் தருதல், தமிழின், தமிழரின் மதிப்பை உயர்த்தல், தமிழ் மொழியை, தமிழ் அறிவுத் தொகுதிகளை உலக மக்களோடு பகிர்தல், தமிழ், தமிழியல் தொடர்பான உயர் ஆய்வினை மேற்கொள்ளல், தமிழாய்வின் தரத்தினை மேம்படுத்தல் போன்ற வளர்ச்சிக்கு உறுதுணை சேர்க்கும் வகையில் முதல்வர் ஸ்டாலின் அவர்களின் இந்த முயற்சி பெரிதும் பாராட்டப் படவேண்டும்.

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்" என்கிறார், பெரும்புலவர் திருவள்ளுவர்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,

தொலைபேசி: 044-2472 6408

## சித்திரம் பேசுதையா






## சிந்தனை பெருகுதையா









# பொறுப்பாளர்கள் நியமனம்

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் விருதுநகர் மாவட்ட அமைப்பாளராக **தோழர் ராஜேஸ்,** கரூர் மாவட்ட அமைப்பாளராக **தோழர் மணிவேல்** ஆகியோர் நியமிக்கப் படுகின்றனர்.

சுப.வீரபாண்டியன்,
(பொதுச் செயலாளர்)

# 'புதுமைப் பெண்' திட்டம் ஒரு புரட்சித் திட்டமே!

மதிவாணன்

தி.மு.கழக அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்து, பெண்களின் முன்னேற்றத்தில் கூடுதல் அக்கறை செலுத்தி வருகின்றது. அதற்கு மகுடமாக அமைந்த 'புதுமைப் பெண்' திட்டம் செப்டம்பர் 5ஆம் நாள் தொடங்கப்பட்டது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வித் திட்டத்தின் கீழ், அரசுப் பள்ளியில் படித்து, உயர்கல்விக்குச் செல்லும் மாணவியர்களுக்கு மாதம் ரூபாய் 1000 ஊக்கத்தொகை வழங்கப்படும். கோவையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்நிகழ்ச்சியைத் தொடங்கி வைக்க, டெல்லி முதலமைச்சர் கெஜ்ரிவால் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.




இளங்கலைப் படிப்புகள், உயர் தொழிற்கல்வி மற்றும் மருத்துவம் சார்ந்தப் படிப்புகள் என அனைத்து உயர் கல்விகளுக்கு மட்டுமல்லாமல் பட்டயப்படிப்புகள், சான்றிதழ்ப் படிப்புகள் போன்றவற்றிற்க்கும் இத்திட்டம் பொருந்தும். இந்த நிதியாண்டில் 5 மாதங்கள் முடிவடைந்துள்ள நிலையில் மீதமுள்ள மாதங்களுக்காக ரூபாய் 698 கோடி அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதன் மூலம் 6,00,000 மாணவியர்கள் பயன்பெறுவார்கள் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

புதுமைப்பெண் திட்டத்திற்கு விண்ணப்பங்கள் கடந்த ஜூலை மாதம் முதல் பெறப்பட்டு, விண்ணப்பங்கள் சரிப்பார்க்கப்பட்டு, சரியான பயனாளர்களை உறுதிச்செய்துள்ள அரசு, மேலும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை மாணவியர்கள் படிப்பைத் தொடர்வதை உறுதி செய்ய உயர் கல்வித்துறைக்கு உத்தரவிட்டுக் கல்வியை உறுதி செய்கிறது.

கொரோனா பெருந்தொற்று முடிந்து, மக்கள் இயல்பு வாழ்விற்குத் திரும்ப முயலும் காலத்தில், கல்வி இடைநிற்றலைத் தடுக்கும் பொருட்டு அரசு, இல்லம் தேடிக் கல்வி போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. இடைநிற்றலுக்கு முக்கியக் காரணம் இப்பெருந்தொற்று மட்டுமன்று, ஒன்றிய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளும், நடவடிக்கைகளும்தான். இதனால் மக்களுக்கு ஏற்பட்ட வருமானம் மற்றும் வேலையிழப்பை மறுக்க முடியாது. மேலும் ஆண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் சமூகத்தில், பெண்களின் கல்வி முதலியவை பாதிக்கப்படும்.

இத்தகையப் பாதிப்பைக் கணித்தும், கருத்தில் கொண்டும், அதிலும் அரசுப் பள்ளியில் பயிலும் மாணவியர்களுக்கு மிகத் தேவையான நேரத்தில் கல்வி ஊக்கத்தொகை வழங்குகிறது தமிழ்நாடு அரசு. வறுமையால் வாடும் குடும்பங்களுக்கு அரசு துணைநிற்கும் என்று மக்களுக்குச் சொல்லும் அதே வேளையில், கைமாறாக உங்கள் பெண்குழந்தைகளைப் படிக்க வையுங்கள் என்றும் வழிகாட்டுகிறார் நம் முதலமைச்சர். பெண்கள் பொருளாதாரச் சுகந்திரத்தை அடையும் வாய்ப்புகளை ஏற்படுத்தி, பாலினச் சமத்துவத்தை நோக்கி மேலும் ஒருபடி முன்னே அழைத்துச் செல்கிறார் அவர். மேலும் இது பெண்களின் திருமண வயதை அதிகப்படுத்தவும் உதவும்.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்(கு)
இறையென்று வைக்கப் படும்.
(குறள் 388) என்ற

குறளுக்கு ஏற்பப் பலரின் போற்றுதலையும், பாராட்டுகளையும் பெற்று வருகின்றார் நம் முதல்வர் தளபதி அவர்கள். முன்னதாகப் பெண்களுக்குப் பேருந்துப் பயணத்தை இலவசமாக்கி, பெருந்தொற்றால் வீடுகளுக்குள் முடங்கிய பெண்களை மீண்டும் பொதுவெளிக்கு அழைத்து வந்தவர். பெண்களுக்குப் பரம்பரைச் சொத்தில் சமபங்கு என்று சட்டம் இயற்றிய கலைஞரின் மகன் அல்லவா அவர்.

அதே வேளையில் பெண்களின் முன்னேற்றப் பாதையைப் பொறுத்துக் கொள்ள முடியாத பிற்போக்காளர்கள், அவதூறுகளை வீசாமல் இல்லை. முக்கியமாக நாம் தமிழர் கட்சியின் சீமான் மாணவிகளைக் கையேந்த வைக்கும் திட்டம் என்று இத்திட்டத்தை இழிவுபடப் பேசியுள்ளார்.

நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்ததும், சென்னை மாநகராட்சிப் பள்ளியில் மதிய உணவுத் திட்டத்தைத் தியாகராயர் கொண்டு வந்து, குழந்தைகளைக் கல்விக்கூடங்களில் அமரச் செய்தார். இதனைப் பெருந்தலைவர் காமராஜார் சென்னை மாநிலம் முழுமைக்கும் விரிவுபடுத்திக் கொண்டு சென்றார். அப்பொழுதும் இத்திட்டம் பிற்போக்குவாதிகளால் இகழப்பட்டதுதான். ஆனால் அதன் பயன் பெருகப் பெருக, அது குறித்தச் செய்திகள் வெளிவரத் தொடங்கும் நிலையில், பிற்போக்கு வாதிகளால் புறக்கணிக்க முடியாத நிலை ஏற்பட்டது என்பது வரலாறு. இதுவெல்லாம் சீமான் போன்றவர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை.

அதுபோல முதல்வர் ஸ்டாலின் அவர்களால் கொண்டு வரப்பட்ட இப் 'புதுமைப்பெண்' திட்டமும் எதிர்காலங்களில் யாரும் மறுக்க முடியாத பெரும் பயன்களை விளைவித்து, மாணவியர், கல்விக்குப் பெரும் புரட்சியை விளைவிக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian